12.03.2026.

IDOP.No.96/2025

எ.ம. சா. 1 புனிதா அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–

நான் என் கணவருக்கு எதிராக விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும் என் கணவர் என்னை அவருடன் சேர்ந்து வாழச்சொல்லி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரிதான். திருமணம் முடிந்து என் கணவர் என்னுடன் கூட இருந்தவரை சந்தோசமாக குடும்பம் நடத்தினோம் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 3 மாதம் சந்தோசமாக இருந்தோம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வேலை விசயமாக எதிர்மனுதாரர் அமெரிக்கா சென்றார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அமெரிக்கா போகும்போது பின்னர் என்னை அழைத்துச் செல்வதாக சொன்னார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அமெரிக்கா சென்றவுடன் அவருக்கு அஜீரணக்கோளாறு ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் இல்லை. 03.07.2022ம் தேதியிட்ட வாட்ஸ்அப் மெசேஜில் என்னிடம் காண்பிக்கப்படுவது நான் அனுப்பியதுதான். அது மசாஆ.6. அதில் உங்களை பக்கத்தில் இருந்து என்னால் பார்த்துக்க முடியல ரொம்ப கஷ்டமா இருக்கு, உடம்பு சரியாகும்வரை சமைக்காதீர்கள், வெளியே வாங்கி சாப்பிடுங்கள், உங்களை மிகவும் நேசிக்கிறேன் ஐ லவ் யு என என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு எதிர்மனுதாரரும் ஐ லவ் யு டு என பதில் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அப்போது அவருக்கு அஜீரணக் கோளாறு ஏற்பட்டு மருத்துவமனையில் ஐசியுவில் இருந்தார் என்றும் அப்போது தான் மேற்படி மெசேஜை நான் அனுப்பிவைத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. காய்ச்சல் இருப்பதாகத்தான் சொன்னார். எதிர்மனுதாரரின் விசா டிசம்பர் 2022ல் முடிகிறது என்றால் சரிதான். என்னுடைய விசாவும் அதே தேதியில் முடிவடைந்தது. அதனால்தான் எதிர்மனுதாரரால் என்னை அமெரிக்காவுக்கு கூட்டிப்போக முடியவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அமெரிக்காவில் இருந்தபோது என்னுடைய பராமரிப்புக்கும்

என்னுடைய வைத்தியசெலவுக்கும் பணம் அனுப்பிவைத்தார் என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படுவது என்னுடைய வங்கி ஸ்டேட்மெண்ட் என்றால் சரிதான். அது மதசாஆ.7. அதில் 16.12.2021ம் தேதி ரூ.36,850/– எனது வங்கி கணக்கில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 20.01.2022ம் தேதி ரூ.1,07,000/– கணக்கில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 27.01.2022ம் தேதி ரூ.1,65,000/– எனது வங்கி கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பணம் நான் போட்டது. 10.03.2022ம் தேதி ரூ.1,58,000/– வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அனுப்பிய பணத்தில் நான் என்னென்ன செலவு செய்தேன் என்பதற்கு மேற்படி மதசாஆ.7ல் நான் சென்னை சில்க்சில் ரூ.1500/–க்கு உள்ளாடைகள், ஓட்டல் மரினா பார்க்கில் நானும் என் அப்பாவும் சாப்பிட்ட வகையில் ரூ.1380/–ம், 6.5.2022ம் தேதி ரிலையன்ஸ் டிரன்ட்சில் ரூ.3752/–க்கு உடைகளும், அதே தேதியில் ரூ.6340/–க்கு டிராலியும், 18.05.2022ம் தேதி போதிசில் ரூ.3505/–க்கு உடைகளும், அன்றே ஓட்டல் சரவணாசில் ரூ.339/–க்கு சாப்பிட்டோம் என்றால் சரிதான். மேற்படி அனைத்தும் விசா எடுக்கும்போது செலவு செய்ததாகும். 29.05.2022ம் தேதி ரூ.10,000/–, ரூ.50000/–மும் மேலும் பல தேதிகளில் இதுபோன்று எதிர்மனுதாரர் எனது வங்கி கணக்குகளில் டெபாசிட் செய்துள்ளார் என்றால் 5வது மாதம் வரைதான் வைப்பீடு செய்தார். நான் செப்டம்பர் 2022ம் தேதி சென்னையில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் வேலைக்கு சேர்ந்த விவரத்தை நான் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வேலைக்கு சேர்ந்த பின்னர்தான் என் கணவருடன் தொடர்பை துண்டித்துவிட்டேன் என்றால் சரியல்ல. 15.08.2022ம் தேதி நான் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய மெசேஜ் என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அது மதசாஆ.8. அதில் நான் என்னை எப்போது அழைத்துச் செல்வீர்கள் என்று கேட்டுள்ளேன் என்றும், அதற்கு எதிர்மனுதாரர் கொஞ்ச நாள் பொறுக்கும்படியும் உடல்நிலை சரியாகட்டும் எனவும் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை அடித்து துன்புறுத்தி வீட்டில்

வைத்து பூட்டிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த வருடம் பூட்டி வைத்தார் என்றும், நான் எவ்வாறு சாப்பிட்டேன், மற்ற விவரங்களை மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை அடித்து காயப்படுத்தியிருந்தால் நான் கண்டிப்பாக மருத்துவமனை சென்றிருப்பேன் என்றால் நான் மருத்துவமனைக்கு போனேன். ஆனால் அது சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எனக்கு போதுமான உணவு, உடை மருத்துவ செலவிற்கு கொடுக்கவில்லை என மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளபோது எனது வங்கி கணக்கில் நான் செலவு செய்த கணக்கு விவரங்கள் உள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அடித்ததற்கு காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர் எனக்கு போட்ட தாலிச்செயினை நான் விற்றுவிட்டேன். எந்த கடையில் எவ்வளவு பணத்திற்கு விற்றேன் என மனுவில் சொல்லவில்லை. 11 பவுன் தாலிச் செயினை விற்கும்போது வங்கி கணக்கில் போடுவார்கள் என்றால் சரியல்ல. நான் விற்ற பணத்தை கையில்தான் வாங்கினேன். 11 பவுன் தாலிச் செயினை ரூ.3,80,000/-க்கு விற்றேன். செப்டம்பர் 2022ல் செயினை விற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் போட்டோ என்னுடையதுன். அதில் தாலிச்செயின் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகைப்பட நகல் மதசாஆ.9. என் கணவர் போதுமான அளவு பணம் அனுப்பியும் நான் அந்த பணத்தைக்கொண்டு நன்றாக செலவு செய்து வந்துவிட்டு தற்போது தாலிச் செயினை என்னுடைய செலவிற்காக விற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 06.08.2022ம் தேதி நான் வாட்ஸ்அப் மெசேஜ் அனுப்பியது என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அது மதசாஆ.10, அதில் எதிர்மனுதாரரிடம் சாப்பிட்டீர்களா என்றும் எனக்கு ஒரு முத்தம் வேண்டுமென கேட்டும் அதற்கு எதிர்மனுதாரர் கொடுத்தும் உள்ளார் என்றால் சரிதான். 29.09.2022ம் தேதி எனக்கு சென்னையில் வேலை கிடைத்தது என்றால் சரிதான். அதன் பிறகுதான் நான் எதிர்மனுதாரரின் செல்போன் நம்பரை பிளாக் செய்தேன்

என்றும் அவருடன் தொடர்பை நிறுத்திக்கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு வேலை கிடைத்த விவரத்தை எதிர்மனுதாரருக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் என்னிடம் உன் வேலையை பார்த்துக்கொள் என சொல்லி என் நம்பரை பிளாக் செய்தார். திருமணத்தின் போது தாலிச்செயின் மட்டுமே 5.1/2 பவுன் செயின் போட்டார்கள் என்றால் இல்லை. தாலிச்செயின் மட்டும் போட்டார்கள். 4 மோதிரமும் மனுதாரர் வீட்டிலிருந்து போட்டார்கள் என்றால் சரியல்ல. மற்றொரு IDOP.45/2023 நான் தாக்கல் செய்த மனுவில் மதசாஆ.8 ஆக மெயிலில் அனுப்பிய செலவு கணக்கிற்கான எக்சல் சீட்டை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் மனுதாரர் எனக்கு கொடுக்கப்பட்ட தொகை ரூ.2,40,574/– எனச்சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதில் செலவு ரூ.1,65,810/– எனச் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அது போக பாக்கி ரூ.74,764/– என் வசம் ரொக்கம் இருப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த செலவு கணக்கில் 18.07.2022 ல் எனக்கு முதுகுவலி பிரச்சனை சம்மந்தமாக ஸ்கேன் எடுக்கப்பட்டதற்கு செலவு கணக்கு காட்டியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நான் தாக்கல் செய்த எதிர்உரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் மருத்துவச் செலவுக்காக மனுதாரர் எதுவும் தரவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஸ்கேன் செலவு தவிர வேறு எதுவும் தரவில்லை. நான் எனக்கு வேலை கிடைத்த பிறகுதான் மனுதாரருடன் தொடர்பு இல்லாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஆகஸ்ட் மாதம் வரை தினந்தோறும் மனுதாரருடன் வாட்ஸ்அப் தொடர்பில் இருந்தேன் என்றால் தினந்தோறும் இருந்துவரவில்லை. நான் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனுவில் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்துவாழ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான்தான் மனுதாரருடன் சேர்ந்து வாழ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1.1/2 வருடம் காத்திருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் என்னை அமெரிக்கா கூட்டிப்போகவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை தவிர வேறு

எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை அடித்து துன்புறுத்தியதாக சொல்லியுள்ளேன். சாட்சி தானாக கூறுகிறார் வாட்ஸ்அப் மெசெஜ் மூலமாக டார்ச்சர் செய்தார். மனுதாரருக்கு அஜீரணக்கோளாறு ஏற்பட்டதாலும், எனக்கு முதுகுவலி ஏற்பட்டதாலும், டிசம்பர் மாதத்துடன் விசா முடிவடைந்ததாலும்தான் மனுதாரர் என்னை அமெரிக்கா அழைத்துச்செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மனுதாரருடன் சேர்ந்துவாழ்ந்தால் உயிருக்கு ஆபத்து என சொல்லி உள்ள நிலையில் அதற்குரிய ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருந்து வருகிறார் என்றால் நான் தயாராக இல்லை. மனுதாரர் மேமாதம் 2023ல் என்னை வீட்டிற்கு கூப்பிட வந்தபோதுதான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை வீட்டிற்கு கூப்பிட அவர் வரவில்லை. அந்த கோபத்தில்தான் மனுதாரர் வாட்ஸ்அப்பில் மெசேஜ் அனுப்பிவைத்தார் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ எல்லா முயற்சியும் எடுத்துவந்தார் என்றும் நான் அதற்கு ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் பெயரில் உள்ள ஆவணங்கள் மூன்று, இருசக்கர வாகனம் ஒன்று ஆகியவற்றை நான் எடுத்துச் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதை திருப்பிக்கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். என்னுடன் மனுதாரர் சேர்ந்துவாழ வேண்டுமென்பதற்காகத்தான் இந்தியாவில் இருந்து வருகிறார் என்றால் நான் சேர்ந்துவாழ தயாராக இல்லை. மனுதாரர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.12 17:49:11 +0530

Principal District Judge,
Dindigul.